*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

முற்பகல் 9–35

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் 9–50 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 9–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 9–50

முற்பகல் 9–50 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

*(மதுரை மேற்கு தொகுதி இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. க.சி.க. ராஜேந்திரன் அவைக்கு வருகை தந்தார். அவரை, மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது இல்லத்தினுள் ஒருவர் நுழைந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விஷயம்? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சொல்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இல்லத்தில், தொடர்ந்து இதுபோன்று.. *(குறுக்கீடுகள்)* இதுபோல நாங்களும் பேசலாமா? *(குறுக்கீடுகள்)* சட்டப் பேரவைத் தலைவர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* நான் பேசவா, வேண்டாமா?

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இல்லத்தில் நேற்றையதினம் *11–45* மணியளவில் ஒருவர் உள்ளே நுழைந்து, அவர் பார்வையாளர்களைப் பார்க்கிற மேல்மாடிக்குச் சென்றிருக்கிறார். அதற்குப்பிறகு, அவருடைய நூலகத்திற்குச் சென்று, திடீரென்று அவருடைய இல்லத்திலிருந்தவர்கள் அதைப் பார்த்து, யார் என்று கேட்கிறபோது, அவர் எதுவுமே பேசாமல் ஊமையைப்போல நடித்து, அதற்குப்பிறகு அவர்கள் கதவை சாத்திக்கொண்டு, கீழே இருக்கின்ற உதவியாளர்களை அழைத்து, உடனடியாக அவர் யார் என்பதை விசாரிக்க வேண்டுமென்று கேட்டபோது, அவர் முதலிலே







பேசாமலே இருந்து, அதற்குப்பிறகு, அவர் பேசியிருக்கிறார். பின்னர் அவர் காவல் துறையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்.

இது இன்றைக்கு அல்ல; இது மூன்றாவது முறையாக நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சியாகும். இந்த அரசைப் பொறுத்தவரையில், வேண்டுமென்றே அவர்களுக்கு முழுப் பாதுகாப்பைத் தராமல் இருந்து கொண்டிருக்கிற நிலையிருக்கிறது என்பதை.. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், பொறுங்கள்; பொறுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஓ. பன்னீர்செல்வம், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். அவர் சொன்னார். அவருக்கு நான் பதில் சொல்கிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் காலையிலேதான் இந்த விஷயம் குறித்த விவரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்ததன்பேரில், அது ஆய்விலே இருக்கிறது. பதில் வந்தபிறகு இதுகுறித்துப் பேசுவோம்; உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் காலையிலே கொடுத்துவிட்டு.. *(குறுக்கீடுகள்)* நீங்கள் காலையிலேதான் கொடுத்திருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* ஆமாம். இன்றைக்குக் காலை *9–15* மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இனி அதுசம்பந்தமான விவரங்களைச் சேகரித்துத்தான் யாராலும் பதில் சொல்லமுடியும். அதனாலே நீங்கள் சொன்னவுடனேயே, பதில் சொல்லிவிடமுடியாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முடியாது. *(கூச்சல்—குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. சி. துரைராஜ், திரு. பி. பலராமன் ஆகியோர் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே கீழே அமர்ந்து கோஷமிட்டனர்.)*

## 4. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *9 (1)*—ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன். *(குறுக்கீடுகள்)* திரு. ப. ரங்கநாதன், . . . *(கூச்சல்—குழப்பம்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றும், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே கீழே அமர்ந்துகொண்டும், தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது இல்லத்தினுள் ஒருவர் நுழைந்தது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் காலையிலேதான் இதுசம்பந்தமாகக் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா. . . (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எதிர்க்கட்சியினுடைய கொறடா திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசிய பேச்சிலே (கூச்சல்—குழப்பம்) எதிர்க்கட்சித் தலைவருடைய வீட்டிலே யாரோ ஒருவர் நுழைந்தார்; (கூச்சல்—குழப்பம்) சரியான பாதுகாப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முன்னாள் முதலமைச்சருடைய வீட்டில் நுழைந்தவர், வேலை வேண்டுமென்று





கேட்டு அவர் வீட்டிற்குச் சென்றதாகவும், அவர் அ.தி.மு.க. அனுதாபி என்றும் காவல் துறை தெரிவித்திருக்கிறது. (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில், இப்படி முன்னால் வந்து நிற்காதீர்கள். எல்லோரும் அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்) முதலில் அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களிடத்திற்குச் செல்லுங்கள். அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேட்டுக்கொள்வோம். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இதுகுறித்து காவல் துறையைச் சேர்ந்தவர்கள் விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) முழு விவரம் கிடைத்தவுடன் அவைக்குத் தெரிவிக்கப்படும். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.தி.மு.க. உறுப்பினர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) உடனடியாக வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள், என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? (கூச்சல்—குழப்பம்) சீக்கிரம் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லோரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்)

(கோஷமிட்டுக்கொண்டிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

*முற்பகல் 10—00*

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)—ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை

இப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. ப. ரங்கநாதன்

2. திரு. துரை சந்திரசேகரன்

3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

4. திரு. தி. வேல்முருகன்

5. செல்வி கே. பாலபாரதி

6. திரு. வை. சிவபுண்ணியம்

### (ஆ) மாநில நூலகக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்—கால அட்டவணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாநில நூலகக் குழுவில் அலுவல்சாரா உறுப்பினர்களாகப் பணியாற்ற மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பெறும் நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய மாநில நூலகக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 17—10—2007 (புதன்கிழமை) மாலை 4—00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 18—10—2007 அன்று மாலை 3—00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 18—10—2007 அன்று மாலை 4—00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறலாம்.



வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், மாநில நூலகக் குழுவிற்கு அலுவல்சாரா உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்தள்.



**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு நகர்—ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் போவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228090
சென்னை-600 008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–10–2007) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. நன்னாரி சர்பத் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, அபராதத் தொகை ஆகியவற்றை 1986–87 முதல் 1989–90 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 25–4–1995 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. தமிழ்நாடு ரோலர் ப்ளோர் மில்ஸ் அசோசியேஷன் உறுப்பினர்கள் கோதுமைப் பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க மேல் வரி, கூடுதல் வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 11–7–1995 ஆம் நாளிட்ட





216 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு, 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. (i – iv) யாதொரு வணிகர், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது ிற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் –பகுதியைச் சேர்ந்த 18, 19, 21, 6, 7 மற்றும் 10, C–பகுதியைச் சேர்ந்த 4, DD–பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் E–பகுதியைச் சேர்ந்த 10, D–பகுதியைச் சேர்ந்த 43 ஆகிய பதிவுகளின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ின் சாதனப் பொருட்களைத் தமிழ்நாட்டிலுள்ள, அறிவிக்கையில் றிப்பிடப்பட்டுள்ள மின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன்மீது செலுத்தத்தக்க வரி விகிதத்தை, 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்திய சட்டம் 74/1956) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த ) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட விகிதத்திற்கு 12–3–1993 ஆம் நாள் முதல் 26–3–2002 ஆம் நாள் வரையிலான வெவ்வேறு காலத்திற்குக் குறைத்தது குறித்தும்; (v) யாதொரு வணிகர், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பாகம் B–ல் 12 ஆம் இனத்தின்கீழ் வருபவை மற்றும் கோதுமைத் தவிடு நீங்கலாக, கால்நடை கலப்புத் தீவனம் உட்பட கால்நடைத் தீவனம் விற்பனைமீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vi) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பொருட்களின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (viii) யாதொரு வணிகரால், சிறிய அளவில் காகிதப் பைகள் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் காகிதப் பைகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு விலக்களித்தது குறித்தும்; (ix) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய இசைக் கருவிகள், அவற்றின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (x) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பொருட்களை மனித ஆற்றலால் மட்டுமே பயன்படுத்தப்படும் அல்லது

இயக்கப்படும் வேளாண் சாதனங்கள் மற்றும் கால்நடைகளைக் கொண்டு பயன்படுத்தப்படும் அல்லது இயக்கப்படும் வேளாண் சாதனங்கள் என்கிற இனங்களின்கீழ் வருபவை என அறிவித்தது குறித்தும்; (xi) வீட்டு உபயோகத்திற்கான திரவ பெட்ரோலிய எரிவாயுவின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி விகிதத்தைக் குறைத்தது குறித்தும்; (xii) வீட்டு உபயோகத்திற்கான திரவ பெட்ரோலிய எரிவாயுவின் விற்பனை தொடர்பான வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகைமீது செலுத்தத்தக்க கூடுதல் வரியை விலக்களித்தது குறித்தும்; (xiii) யாதொரு வணிகரால், பதிவு பெற்ற வணிகருக்கு விற்பனை செய்யப்படுகிற யாதொரு பொருளின்மீது செலுத்தத்தக்க விற்பனை வரி, மேல் வரி, மறு விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றிற்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின், 30–12–2006 ஆம் நாளிட்ட 193 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. யாதொரு வணிகர், தென்னை நார் கயிறு விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 31–12–2006 ஆம் நாளிட்ட 196 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. யாதொரு விநியோகிப்பாளரால், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணை விளக்கம் III–ல் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளபடி, நுகர்வோரின் வீட்டு உபயோகத்திற்காக சமையல் எரிவாயுவின் இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து விற்பனைமீது பெட்ரோலிய எண்ணெய் நிறுவனம் நீங்கலாக, செலுத்தத்தக்க வரியை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 1–1–2007 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



6. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானம் (தயாரிப்பு) விதிகளில் பிணைத் தொகையினை உயர்த்தித் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 1–1–2007 ஆம் நாளிட்ட 27 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் பிணைத் தொகையினை உயர்த்தித் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 1–4–2007 ஆம் நாளிட்ட 28 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. அரக்கோணத்தில் உள்ள மத்திய தொழிற் பாதுகாப்புப் படையின் 6–வது சேமக்காவல் படைப்பிரிவு படைத் தலைவரின் பொறுப்பின்கீழ் உள்ள அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளுக்கு அவற்றின் பதிவெண்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்கு செலுத்தத்தக்க வரி மீதான அபாரதத் தொகையினைத் தள்ளுபடி செய்தது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 8–1–2007 ஆம் நாளிட்ட 37 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. (i) திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனைக் கூடங்களைச் சேர்ந்த அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியில், மக்காச்சோளம் (அனைத்து வடிவங்களிலும்) வரகு, ஆமணக்கு (கொட்டை அல்லது விதைகள்) மற்றும் வேப்பங்கொட்டை ஆகியவற்றின் விற்பனையை முறைப்படுத்தவும்; (ii) தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் விற்பனைக் குழுக்களின்கீழ் இயங்கிவரும் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர்

மாவட்டங்களிலுள்ள விற்பனைக் கூடங்களைச் சேர்ந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்காடிப் பகுதியில் வேப்பங்கொட்டை விற்பனையை முறைப்படுத்தவும்; (iii) தருமபுரி விற்பனைக் குழுவின்கீழ் இயங்கி வரும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விற்பனைக் கூடங்களைச் சார்ந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்காடிப் பகுதியில் கொண்டைக்கடலை (அனைத்து வடிவங்களிலும்) விற்பனையை முறைப்படுத்தவும் மற்றும் (iv) புதுக்கோட்டை விற்பனைக் குழுவின்கீழ் இயங்கி வரும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியில் வாழைக்காய் மற்றும் வாழைப்பழத்தின் விற்பனையை முறைப்படுத்தவும் வேளாண்மைத் (AM–2) துறையின் 10–8–2006 ஆம் நாளிட்ட 198 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (திரை–2) துறையின் 25–5–2007 ஆம் நாளிட்ட 754 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 28–3–2007 ஆம் நாளிட்ட 28 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

12. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–6) துறையின் 28–6–2007 ஆம் நாளிட்ட 981 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



13. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–7) துறையின் 25–4–2007 ஆம் நாளிட்ட 637 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.1) துறையின் 7–2–2007 ஆம் நாளிட்ட 43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. திருவாளர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் சர்க்கரை ஆலைகளிலிருந்து கரும்புச் சக்கை கொள்முதல் செய்ததன் பேரில் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 5–3–2007 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. திருவாளர்கள் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், மேட்டூர் அணை, பொதுமக்கள் சாப்பிடுவதற்காக வறுத்துத் தயாராக வழங்கக்கூடிய சிறிய மீன்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 11–4–2007 ஆம் நாளிட்ட 90 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. யாதொரு வணிகர், கருப்புக்கட்டித் தூள் மற்றும் நாட்டுச் சர்க்கரை உள்பட கருப்புக்கட்டி மற்றும் வெல்லம் ஆகியவற்றின் விற்பனை அல்லது கொள்முதல்மீது அவற்றின் விற்பனை அல்லது கொள்முதல்மீதான மொத்த வியாபாரத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முந்நூறு கோடிக்கு மேற்படாமல் செலுத்தத்தக்க வரியிலிருந்து

விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 12–4–2007 ஆம் நாளிட்ட 92 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. (i) யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகரால் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி விகிதத்தைக் குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 23–5–2007 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. குன்னூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தேயிலை ஏல விற்பனை மையங்களில் தனியார் தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் (Private Bought Leaf Factories) மற்றும் தமிழ்நாடு சிறு அளவில் தேயிலை பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இணையம் (INDCOSERVE) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூளை விற்பனை செய்யும்போது அல்லது நேரடியான முதல் விற்பனையின்போது செலுத்தத்தக்க வரி விகிதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 24–5–2007 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக யாதொரு பொருளின் விற்பனைமீது செலுத்தவேண்டிய வரியைச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி.2) துறையின் 14–6–2007 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2007).

2. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2007).

3. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2007).

4. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்தவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2007).

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2007)

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228090
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

(C)

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.